**2.71 கன்னியாகுமரி, தேனி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் நான்கு உதவிப் பொறியாளர்கள் பணியிடங்கள் – 1.4.2000 முதல் ஓராண்டிற்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்தல்**

---

ஊரக வளர்ச்சி (இ4) துறை

அரசாணை (ஒரு பத்தாண்டு) எண்.142 நாள் : 6.4.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.263, ஊ.வ.(சி.எஸ்.எஸ்.1) துறை, நாள்.27.12.96.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.103877/டியூ–1 நாள்.28.12.99.

**ஆணை**

ஊரக வளர்ச்சி இயக்குநர், படிக்கப்பட்ட கடிதம் 2–இல் ஊரக வளர்ச்சித் துறையில் ஆண்டுதோறும் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்படும் ரூபாய்.500 கோடி மதிப்புள்ள பணிகள் ஊரக வளர்ச்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயலாற்றப் பட்டுவருவதாகவும், இம்மாதிரியான அதிகப்படியான பணிகளை செயலாற்ற, இயக்ககத்தில் உள்ள தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் போதுமானதாக இல்லை என்றும், நிதிப் பற்றாக்குறையினால், புதிய பணியிடங்களை தோற்றுவிக்க இயலாததால் 385 ஊராட்சி ஒன்றியங்களில் உதவிப் பொறியாளர் மற்றும் வட்டாரப் பொறியாளர் ஆக இருவர் பணியாற்றுபவர்களில், மிகக் குறைந்த அளவு வேலைப்பளுக்கொண்ட, கீழ்காணும் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் 4 உதவிப்பொறியாளர் பணியிடங்களை நிரந்தரமாக ஒரு வருடத்திற்கு இயக்குநரகத்திற்கு மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தக்கலை ஊராட்சி ஒன்றியம் | – 1 பணியிடம் |
| 2. | 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் ஊராட்சி ஒன்றியம் | – 1 பணியிடம் |
| 3. | 6 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் | – 1 பணியிடம் |
| 4. | 8 ஊராட்சிகள் உள்ளடக்கிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம் | – 1 பணியிடம் |

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்ட நான்கு மாவட்டங்களில் உள்ள தக்கலை, கம்பம், செங்கோட்டை மற்றும் எஸ்.எஸ்.குளம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நான்கு உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களை 1.4.2000 முதல் ஓராண்டிற்கு ஊரக வளர்ச்சி இயக்குநரகத்திற்கு மாற்றம் செய்யவும், இந்த நான்கு உதவிப்பொறியாளர் பணியிடங்களுக்கு புதியதாக உதவிப்பொறியாளர்களை அம்மாவட்டங்களுக்கு தோற்றுவிக்கப்படக் கூடாதென்ற நிபந்தனையுடனும் இவ்வேற்பாடு மேலும் தொடர்வதற்கு அரசால் ஆய்வு செய்யத்தக்கவகையில் செயற்குறிப்பினை உரிய காலத்திற்குள் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும் என்றும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

3. இந்த அரசாணை 28.2.2000 நாளிட்ட நிதித்துறை அ.சா.கு.எண்.13297/ஊ.வ/ 2000–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்